

தலைமைச் செயலகத்தில், நேற்று (11.10.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் பயிர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர். எல். சுப்ரமணியன், புள்ளியியல் துறை இயக்குநர் கணேஷ், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் அன்பழகன், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காலிப்பணியிடங்கள் நிரப்புதல் - வாரிசுதாரர்கள் பணி நியமனம்!

# விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, அக்.12-

முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக காலிப்பணியிடங்களை நிரப்புதல், கருணை அடிப்படையிலான வாரிசுதாரர்களை பணி நியமனம் செய்தல், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பலன்களை வழங்குதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும் - என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், 10.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (PTCS) மேலாண் இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர் மற்றும் போக்குவரத்துத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர், பொதுமக்களுக்கு பேருந்து சேவையினை நிறைவாக அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் குறைந்த பயண கட்டணத்தில் பேருந்து சேவையினை வழங்கி வருகிறது. கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் ஏற்பட்ட நிதி நெருக்கடி தொடர்ந்த போதிலும், போக்குவரத்து சேவையினை சிறப்பாக செய்தும், பயண கட்டணத்தை உயர்த்தாமலும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக, 1,619 காலிப் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 685 ஓட்டுனருடன் நடத்துநர் காலிப்பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து விரைவுபடுத்த அறிவுறுத்தினார்.

கருணை அடிப்படையிலான பணி நியமனங்களின் நிலை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. தற்போது, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும், இறந்த பணியாளர்களின் வாரிசுகள் ஓட்டுநர், நடத்துநர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இப்பிரிவில், நியமனத்தை துரிதப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், வாகனங்களைச் சிறப்பாகப் பராமரிப்பதற்கும், அவற்றின் செயல்திறனை அதிகப்படுத்துவதற்கு ஊக்கப்படுத்த, தற்போது வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு ஊக்கத் தொகை / சிறப்பு ஊக்கத்தொகையை உயர்த்துவது தொடர்பாக ஆராயுமாறு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர்2022 முதல் ஆகஸ்ட்2023 வரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களுக்கான நிலுவைத் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்துதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தல் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இதில், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து, காப்பீட்டு தொகை குறித்து விவரம் கோரப்பட்டு, இக்காப்பீடு தொடர்பாக ஓய்வூதியர்களிடம் விருப்புரிமை படிவம் பெற்றும், தொழிற்சங்கத்தினரிடம் கலந்தாலோசித்தும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/2257/2023

**மறு e - ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**To purchase 12 No's of Oracle Database Enterprise Edition Software for use of Greater Chennai Corporation with one year support** - க்கான ஒப்பம்

| பணியின் மதிப்புத் தொகை 5,66,61,792/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 5,66,618/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 30.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.10.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 5570 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


## மாதவரம் தொகுதி மக்களின் குடிநீர் தேவைக்காக

# கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்படுமா?

## பேரவையில் மாதவரம் எஸ்.சுதர்சனம் கேள்வி!

சென்னை, அக்.12-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு :

**எஸ்.சுதர்சனம்:** மாதவரம் தொகுதியில் புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் உருவாகி சென்னை மாநகருக்குக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்ந்து கொண்டு இருக்கின்றது. அதிலே 4 TMC தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. ஆனால், அங்கே வசிக்கின்ற மக்களுக்கு பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப்பெறவில்லை ஆகவே, ஒரு கூட்டுக்குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தர முடியுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**கே.என்.நேரு :** திருவள்ளூர் மாவட்டத்திலிருந்துதான் முழுமையாக 3,4 ஏரிகளிலிருந்து சென்னைக்குக் குடிநீர் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அங்கு சென்ற போது திருவள்ளூர் மாவட்டத்திலேயே, அங்குள்ள மக்கள் சொன்னார்கள்



--இங்கிருந்து செல்கிறது ஆனால், எங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் நேற்று பதில் சொல்கிறபோதே சொன்னேன். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 MLD எடுக்கக்கூடிய வாய்ப்பு என்பது இன்னும் 7,8 மாதங்களில் கிடைக்கும் அப்படி கிடைக்கின்றபோது ஒரு பகுதி-pipeline மட்டும்தான் போடவேண்டும். புது குடிநீர் திட்டம் என்பது அல்ல pipeline connection கொடுத்தாலே திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான நகரங்களுக்கு, அந்தத் தண்ணீர் வசதி கிடைக்கும் அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திரு.வி.க. நகர் தொகுதியில்

# அருந்ததியர் நகரில் புதிய நியாய விலைக் கடை அமைக்கப்படுமா?

## பேரவையில் ப.தாயகம் கவி கேள்வி!

சென்னை, அக்.12-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் பொழுது திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அளித்த பதிலும் வருமாறு :

**ப.தாயகம் கவி :** திரு.வி.க நகர் தொகுதி வார்டு எண்71, மேட்டுப்பாளையம் அருந்ததி நகரில் 16 தெருக்கள் உள்ளன. அந்த 16 தெருக்களிலும் சுமார் 750 குடும்ப அட்டைதாரர்கள் இருக்கின்றனர். அந்த 750 குடும்ப அட்டைதாரர்களும் உணவு பொருட்களை பெறுவதற்கு நீண்ட தூரம் பயணித்து ஜமாலியா பகுதியிலே உள்ள நியாயவிலைக்கடையில் உணவுப் பொருட்களை பெறவேண்டிய சூழ்நிலை. எனவே, அவர்க



ளின் சிரமத்தை போக்குகின்ற வகையில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற ராஜீவ் காந்தி பூங்காவிற்கு அருகிலே இருக்கின்ற காலி மைதானத்தில் நியாய விலை கடை அமைத்து தர அமைச்சர் முன் வருவாரா என்பதை தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் :** 16 தெருக்கள் அடங்கிய தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பகுதிக்கு 750 குடும்ப அட்டைதாரர்கள் இருப்பதாக குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக நகரப் பகுதிகளில் 2000 அளவிற்கான குடும்ப அட்டைகள் இருப்பதற்கு கூட அதற்கு சாத்தியங்கள் உண்டு. எனவே 750 என்பது ஒரு கூடுதலான எண்ணிக்கையாகத் தெரியவில்லை. ஒருவேளை உறுப்பினர் விரும்பினால், ஏனென்றால் நகரப் பகுதியில் 1000ற்கு குறைவாக 1200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். கிராமப் பகுதிகள் என்றால் ஒரு 800 குடும்ப அட்டைகள் போதும். ஆகவே, உறுப்பினர் சொல்வது நகரப் பகுதியில் 750 தான், மெயின் கடையில் இருந்து எடுப்பது என்றால், அதை எடுத்து விட்டால் தாய் கடை தன் தகுதியை இழந்து விடும். ஆகவே சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தேவைப்பட்டால் நானும் அங்கு சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கழக சட்டத் திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன், தமிழ்நாடு வீட்டு வேலை தொழிலாளர்கள் நல அறக்கட்டளை மற்றும் சென்னை லயோலா கல்லூரி புற சேவை துறையும் இணைந்து நடத்திய "கண்ணியமான பணி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். நிகழ்வில் லயோலா கல்லூரி முதல்வர் அருட்தந்தை டாக்டர் லூயிஸ் ஆரோக்கியராஜ், குத்தம்பாக்கம் ஊராட்சி முன்னாள் தலைவர் இளங்கோ , சமூக செயற்பாட்டாளர் திருமதி. கவிதா முரளிதரன் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கிளாராம்மாள், வளர்மதி ஆகியோர் பங்கேற்றனர்.


"நீங்கள் இன்றி ஐந்தாம் ஆண்டு
நெஞ்சமெல்லாம் நினைவுகளோடு"



தோற்றம் 16.01.1935

மறைவு 12.10.2018

**சா.பெ. மலைச்சாமி**, M.A., Ex.MLA.,

மேலூர் வடக்கு,
மேனாள் தலைவர், தி.மு.க. மாநில இலக்கிய அணி

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்**



**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**கோ.சு. மணி**
**அக்டோபர் 12 (1962)**



சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கை குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**